வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
தவணைப் பரீட்சை, யூன் - 2019

Conducted by Field Work Centre, Thondaimanaru
In Collaboration with Provincial Department of Education
Northern Province
Term Examination, June - 2019

FWC

தரம் :- 13 (2019)	வணிகக்கல்வி I	32	T	I	இரண்டு மணித்தியாலம்

அறிவுறுத்தல்கள்:-

- எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடை எழுதுக.
- மேலே தரப்பட்டுள்ள இடைவெளியில் உமது சுட்டெண்ணை தெளிவாக எழுதுக.
- 01 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்குச் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- 31 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்கும் இரண்டு புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

சுட்டெண் :...................................

பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்			
வினா இல	புள்ளிகள்		கையொப்பம்
01 – 30		1வது பரீட்சகர்	
31 – 50		2வது பரீட்சகர்	
மொத்தம்			

01) மனித தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு பயன்படும் பல்வேறு முறைகள் என்பதுடன் தொடர்புபட்டுள்ள பண்பு பின்வருவனவற்றுள் எது?
1) தனிநபர்களுக்கிடையே வரையறுக்கப்பட்டதாக இருத்தல்.
2) வாழ்வதற்கு கட்டாயம் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.
3) சமூகத்தாக்கங்களால் மாற்றம் செய்ய முடியும்.
4) வணிகர்களினால் தோற்றுவிக்க முடியாதது.
5) யாவருக்கும் பொதுவானது. (……….)

02) வணிகர்களுக்குப் பல்வேறு நோக்கங்கள் காணப்பட முடியும். கீழ்வரும் வணிக நோக்கங்களில் ஒன்று ஏனைய நோக்கங்களிலிருந்து வேறுபட்ட ஒன்றாகும். அத்தகைய வேறுபட்ட வணிக நோக்கமாக கருதக்கூடியது எது.
1) சந்தைப்பங்கை அதிகரித்தல்
2) இலாபத்தை உச்சப்படுத்தல்
3) விற்பனையை உச்சப்படுத்தல்
4) சமூகத்தினதும், மக்களினதும் நலன்பேணல்
5) சந்தையில் நிலைத்திருத்தல் (……….)

03) "மலையக மக்கள் மனை அமைப்பது தொடர்பான தமது எண்ணங்களை நிறைவேற்றுவதற்குப் பொருத்தமான அமைவிடம் ஒன்றினை தெரிவு செய்கையில் நாட்டின் சட்டதிட்டங்கள் தாக்கங்களை ஏற்படுத்துவதுடன், அவர்களின் வாழ்க்கைச் செலவுகளும் இதற்கு தடையாக அமைந்துவிடுவதுண்டு".
மேற்படி கூற்றில் அடங்கியுள்ள பேரினச்சூழல் காரணிகளின் எண்ணிக்கையாக இருப்பது.
1) இரண்டாகும் 2) மூன்றாகும் 3) நான்காகும் 4) ஐந்தாகும் 5) ஆறாகும். (……….)

agaram.lk

04) நிலைபேண்தகு அபிவிருத்தியின் பிரதான கோபுரங்கள் X அட்டவணையிலும் அவை ஒவ்வொன்று தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் Y அட்டவணையிலும் காட்டப்பட்டுள்ளன.

X	Y
X - பொருளாதார நிலைபேண்தகு அபிவிருத்தி Y - சூழல் நிலைபேண்தகு அபிவிருத்தி Z - சமூக நிலைபேண்தகு அபிவிருத்தி	1. சமத்துவ நிலைபேணல் 2. கழிவுப்பொருள் முகாமைத்துவம் 3. திறன்களைப் பலப்படுத்தல். 4. மானிட பல்லினத்தன்மைக்கு மதிப்பளித்தல் 5. புத்துருவாக்கங்களை அறிமுகப்படுத்தல் 6. தீங்கிழைக்காத வலுச்சக்தி பயன்பாடு

X க்கும், Y க்கும் பொருத்தமான இணைப்பினைத் தெரிவு செய்க.

1) X – 1, 4 Y – 5, 6 Z – 2, 3
2) X – 3, 5 Y – 2, 6 Z – 1, 4
3) X – 2, 3 Y – 1, 5 Z – 4, 6
4) X –4,, 6 Y – 3, 5 Z – 1, 2
5) X – 5, 6 Y – 1, 4 Z – 2, 3 (……….)

05) வணிகங்களை வெற்றிகரமாகக் கொண்டு நடாத்துவது தொடர்பில் பல்வேறு வழிகளில் அரச தலையீடுகளை மேற்கொள்வதுடன் அதனூடே அரசு சில விடயங்களை எதிர்பார்ப்பதும் உண்டு. அந்தவகையில் வணிகங்கள் வணிக நடவடிக்கைகளால் கூடுதலான முதலீடுகள் இடுவதனை ஊக்குவிப்பதான எதிர்ப்பார்க்கைக்கு அரசு தலையிடுவதான முறையெனக் கருதக்கூடியது யாது?

1) வாடிக்கையாளராக தொழிற்படல்
2) வரி அறவீட்டாளராக தொழிற்படல்
3) உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குபவராக தொழிற்படல்
4) கூட்டுருத்திட்டங்களை உருவாக்குபவராக தொழிற்படல்
5) போட்டியாளராக தொழிற்படல் (……….)

agaram.lk

06) அரசு தனது பொருளாதார நோக்கங்களை எட்டுவதற்கு பின்பற்றும் அரச கொள்கைகளும், அக்கொள்கைகளில் அடங்கும் சில விடயங்களும் கீழே தரப்பட்டுள்ளன.

அரச கொள்கைகள்	விடயங்கள்
A. நிதிக்கொள்கை B. இறைக் கொள்ளை	1. துறைமுக அபிவிருத்தி 2. வங்கி வட்டி வீதம் 3. கடன் வழங்கும் துறைகளை அங்கீகரித்தல் 4. லொத்தர் சீட்டு விற்பனை 5. ஒதுக்கு வீதங்கள் 6. வட்டிக் கொடுப்பனவுகள்

அரச கொள்கைகளையும், விடயங்களையும் இணைக்கும் போது மிகச்சரியான விடையாக அமைவது எது.

1) A – 2, 3, 5 B – 1, 4, 6
2) A – 3, 4, 5 B – 1, 2, 6
3) A – 1, 4, 6 B – 2, 3, 5
4) A – 1, 2, 6 B – 3, 4, 5
3) A – 2, 4, 6 B – 1, 3, 5 (……….)

07) நுகர்வோர் பாதுகாப்பின் மூலம் நுகர்வோருக்கும், வணிகருக்கும் கிடைக்கும் அனுகூலங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A – வாழ்வதற்கு பொருத்தமான சூழல் நிலைமையொன்று ஏற்படல்

B – சந்தை மோசடிகளிலிருந்து பாதுகாப்பு கிடைத்தல்

C – முறைகேடான செயற்பாடுகளை தவிர்த்துவிட முடிதல்

D – சட்டரீதியான பாதுகாப்புக் கிடைத்தல்

E – தேகாரோக்கியத்தினை பாதுகாத்துக் கொள்ள முடிதல்

மேலே தரப்பட்ட அனுகூலங்களில் வணிகருக்கு மட்டும் உரித்தானவை எது? அல்லது எவை?

1) Aயும் Dயும் 2) Cயும் Eயும் 3) E மட்டும்
4) C மட்டும் 5) மேற்கூறிய எல்லாம் (……..)

08) வணிக அமைப்பு வகையினையும், அதன் குணாதிசயங்களையும் சரியாகக்காட்டும் கூற்றினைத் தெரிவு செய்க.

1) தனியார் துறைக்குரிய, பொறுப்பு வரையறுக்கப்பட்ட சட்ட ஆளுமையற்ற, இலாபம் உழைத்தலை நோக்காகக்கொள்ளாத வணிக அமைப்புவகை கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளாகும்.
2) பொதுத்துறைக்குரிய, பொறுப்பு வரையறுக்கப்பட்ட, சட்ட ஆளுமையற்ற, இலாபம் உழைத்தலை நோக்கமாகக் கொண்ட வணிக அமைப்பு வகை அரச கூட்டுத்தாபனங்களாகும்.
3) தனியார் துறைக்குரிய, பொறுப்பு வரையறுக்கப்படாத, சட்ட ஆளுமையற்ற, தனியொருவரால் ஆரம்பிக்க முடியாத வணிக அமைப்பு வகை பங்குடமை வணிகங்களாகும்.
4) பொதுத்துறைக்குரிய, பொறுப்பு வரையறுக்கப்பட்ட, சட்ட ஆளுமையுடைய ஆகக்குறைந்த அங்கத்தவர் எண்ணிக்கை பத்தினைக் கொண்டிருக்க வேண்டிய வணிக அமைப்பு வகை கூட்டுறவு வணிகங்களாகும்.
5) பொதுத்துறைக்குரிய பொறுப்பு வரையறுக்கப்படாத, சட்ட ஆளுமையுடைய, இலாப நோக்கற்ற வணிக அமைப்புவகை அரச திணைக்களங்களாகும். (……..)

agaram.lk

09) விதுஷன் க.பொ.த உயர்தரத்தின் பின்னர் மூன்றுவருடங்கள் தளபாட தொழிற்சாலை ஒன்றில் இணைந்து பணியாற்றியிருந்தார். அத்தொழிற்சாலையில் சிறிய இல்லங்களில் மடித்து பேணக்கூடிய இடங்களை மீதப்படுத்தும் பல்வேறு தளபாடங்களை தமது சுய சிந்தனையால் வடிவமைத்து பாராட்டுக்களைப்பெற்றுக் கொண்டார். அவரது திறனைக்கண்ட முகாமை தளபாட உற்பத்தி தொடர்பில் தொழிநுட்பக்கற்கைநெறி ஒன்றினைப் பூர்த்தி செய்ய வசதி செய்து கொடுத்ததுடன் நிறைவில் பாரிய தளபாட தொழிற்சாலைகளில் வடிவமைப்பு தொடர்பான பயிற்சி வேலைத்திட்டங்களிலும் கலந்து சான்றிதழ்களையும் பெற்றிருந்தார். தற்போது "லஜன் தளபாட மாளிகை" என்ற பெயரில் வணிகம் ஒன்றினை ஆரம்பித்துள்ளார்.

மேலே தரப்பட்ட சம்பவத்தில் விதுஷன் முயற்சியாண்மைத்திறன்களை விருத்தி செய்து கொண்ட முறைகள் எத்தனை.

1) 1 ஆகும் 2) 2 ஆகும் 3) 3 ஆகும் 4) 4 ஆகும் 5) 5 ஆகும் (……..)

10) தனது உறவினருக்கு வழங்கியிருந்த கடனின் ஒருபகுதி திரு.சுகிர்தனுக்கு மீளக்கிடைக்கப்பெற்றிருந்தது. அத்தொகையில் அவர் ரூபா இருபதுலட்சம் பெறுமதியான காணியொன்றைக் கொள்வனவு செய்ததுடன், மீதிப்பணத்தினை வங்கியொன்றில் வைப்புச்செய்திருந்தார். இந்நிகழ்வில் பணத்தினால் நிறைவேற்றப்பட்ட கருமங்களை சரியான ஒழுங்கு முறையில் எடுத்துக்காட்டும் விடை எது.

1) பெறுமானத்திரட்டு, பெறுமான அளவுகோல், பரிமாற்றூடகம், பிற்போடப்பட்ட கொடுப்பனவு ஊடகம்.
2) பிற்போடப்பட்ட கொடுப்பனவு ஊடகம், பெறுமான அளவுகோல், பரிமாற்றூடகம், பெறுமானத்திரட்டு.
3) பிற்போடப்பட்ட கொடுப்பனவு ஊடகம், பெறுமானத்திரட்டு, பெறுமான அளவுகோல்.
4) பெறுமான அளவுகோல், பரிமாற்றூடகம், பிற்போடப்பட்ட கொடுப்பனவு ஊடகம், பெறுமானத்திரட்டு.
5) பெறுமானத்திரட்டு, பரிமாற்றூடகம், பிற்போடப்பட்ட கொடுப்பனவு ஊடகம், பெறுமான அளவுகோல். (………..)

11) ஆரபி தனக்கு சொந்தமான உடலுறுதியினை மேம்படுத்தும் நிலையமான ரூபா 50 லட்சம் பெறுமதியான கட்டிடத்தினை தீக்காப்புறுதி செய்துள்ளார். எனினும் ஏற்பட்ட திருட்டினால் ரூபா 8 லட்சம் பெறுமதியான பொருட்கள் களவாடப்பட்டமைக்கு இழப்பினை அவர் கோரிய போது, காப்புறுதி நிறுவனம் அதனை நிராகரித்திருந்தது. அவ்வாறு நிராகரிக்கப்பட்டமைக்குரிய காப்புறுதித்தத்துவமாக அமைவது.

1) உச்ச நம்பிக்கைத் தத்துவம்
2) இழப்பீட்டுத் தத்துவம்
3) காப்புறுதி செய்யும் உரிமைத்தத்துவம்
4) பதிலாள் வைப்புத்தத்துவம்
5) அண்மிய காரணித்தத்துவம் (………..)

12) களஞ்சியசாலை ஒன்றை நிறுவும் போது கவனம் செலுத்த வேண்டிய காரணி அல்லாதது பின்வருவனவற்றுள் எது?

1) களஞ்சியசாலையில் பணியாற்றும் ஊழியர் எண்ணிக்கை
2) கட்டட அமைப்புத்திட்டமும் வசதிகளும்
3) பொருளின் தன்மை
4) கிரயங்கள்
5) பண்டங்களை இடமாற்றும் திறன் (………..)

13) நிறுவனங்களின் தன்மை, உற்பத்திகளின் தன்மை என்பனவற்றிற்கமைய பல்வேறுபட்ட வகையிலான அமையவியல் முறைகள் பயன்படுத்தப்படுவதுண்டு. கீழே அமையவியலின் முறைகளும், அவற்றுக்கான உற்பத்திகளின் தன்மைகளும் காட்டப்படுகின்றன.

அமையவியல் முறைகள்	**உற்பத்திகளின் தன்மைகள்**
A. சமநிறை கொண்ட அமையவியல் முறை	1. நெஸ்லே உற்பத்திகள்
B. அதிகரித்த பெறுமதியில் உள்வரும் அமையவியல் முறை	2. வாயுத்தாங்கி
C. அதிகரித்த பெறுமதியில் வெளிச்செல்லும் அமையவியல் முறை	3. விமான உற்பத்தி
D. நேர்மாற்று அமையவியல் முறை	4. இரசாயன பொருள் உற்பத்தி

அமையவியல் முறைகளினையும், உற்பத்திகளின் தன்மைகளினையும் சரியாகப் பொருத்தும் விடையாக அமைவது எது.

1) A – 1, B – 3, C – 4, D – 2
2) A – 2, B – 4, C – 3, D – 1
3) A – 3, B – 2, C – 1, D – 4
4) A – 4, B – 1, C – 2, D – 3
5) A – 2, B – 3, C – 1, D – 4 (……….)

14) வெளிநாட்டு வியாபாரத்தின் போது பயன்படுத்தப்படுகின்ற ஆவணங்களில் சில X நிரலிலும், அவை தேவைப்படுவதற்கான காரணங்கள் Y நிரலிலும் தரப்பட்டுள்ளன.

X	Y
1. உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்	A. விவசாய உற்பத்திகளின் பாவனைப் பொருத்தப்பாட்டினை உறுதி செய்ய.
2. நட்ட ஈட்டுக் கடிதம்	B. வரிச்சலுகைகளைப் பெறுவதற்கு
3. சுகநலச்சான்றிதழ்	C. குற்றமுடைய சுமைச்சீட்டிற்குப் பதிலாக தூய சுமைச்சீட்டினைப் பெறுவதற்கு
4. சுமைச்சீட்டு	D. பொருளின் உரிமையினை துறைமுகத்தில் உறுதிப்படுத்துவதற்கு

X நிரலில் உள்ள ஆவணங்களுக்கேற்ப, Y நிரலில் தரப்பட்டுள்ள, அவை தேவைப்படுவதற்கான காரணங்களைச் சரியான ஒழுங்கு முறையில் எடுத்துக்காட்டும் விடையாக அமைவது.

1) D, B, C ,A 2) B, C, A, D 3) C, D, B, A
4) B, C, D, A 5) A, D, C, B (……….)

15) உள்நாட்டு, வெளிநாட்டு வியாபாரங்களின் வகைகள் X அச்சிலும், அவற்றுக்கான விளக்கங்கள் Y அச்சிலும் தரப்பட்டுள்ளன.

X	Y
A. மொத்த வியாபாரம்	1. நாடொன்றிலிருந்து இறக்கப்பட்ட பொருட்களை நாட்டினுள் கொண்டுவந்து மாற்றங்களை செய்து / செய்யாது வேறொரு நாட்டிற்கு அனுப்புதல்.
B. சில்லறை வியாபாரம்	2. மீள் விற்பனை செய்யும் எண்ணத்தில் கொள்ளவனவு செய்யும் கொள்வனவாளர்களுக்கு பொருட்களை விற்பனை செய்தல்.
C. மீள் ஏற்றுமதி வியாபாரம்	3. இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை நாட்டிற்குள் கொண்டுவராது, துறைமுகத்தினுள் மீள ஒழுங்குபடுத்தி / ஒழுங்குபடுத்தாமல் மீள பிறிதொரு நாட்டுக்கு ஏற்றுமதி செய்தல்.
D. இறக்கியேற்றல் வியாபாரம்	4. இறுதி நுகர்விற்காகப் பொருட்களை விற்பனை செய்தல்.

X, Y என்பனவற்றினை இணைக்கும் போது சரியான விடையாக அமைவது.

1) A – 1, B – 3, C – 2, D – 4
2) A – 4, B – 2, C – 3, D – 1
3) A – 2, B – 4, C – 1, D – 3
4) A – 3, B – 1, C – 4, D – 2
5) A – 2, B – 4, C – 3, D – 1 (……….)

16) றொபர்ட் எல். கேட்ஸ் என்பவரினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள முகாமையாளர்களிடம் மேம்படுத்த வேண்டியதிறன்கள் X அச்சிலும், அத்திறன்களுக்கான விளக்கங்கள் Y அச்சிலும் காட்டப்பட்டுள்ளன.

X	Y
A. எண்ணக்கருத்திறன்	1. ஊழியர்களை விளங்கிக் கொள்வதற்கும், ஒத்துழைப்புடன் வேலைசெய்வதற்குமான ஆற்றல். 2. பிரச்சினைகளை விளங்கிக் கொள்வதற்கும், தீர்வினை வழங்குவதற்குமான ஆற்றல்.
B. மானிடத்திறன்	3. விஷேட துறையொன்றில் கருமங்களை புரியும் ஆற்றல். 4. அக, புற சூழல் தொடர்பாக காணப்படுகின்ற விளக்கங்கள்.
C. தொழில்நுட்பத்திறன்	5. முன்வரிசை முகாமையாளரிடம் பெரிதும் எதிர்பார்க்கப்படும் திறன். 6. ஊழியர்களை ஊக்குவிப்பதற்கும், இணைந்து வேலை செய்வதற்குமான ஆற்றல்.

X, Y என்பனவற்றினை இணைக்கும் போது சரியான விடையாக அமைவது.

1) A – 1, 5 B – 2, 6 C – 3, 4
2) A – 3, 6 B – 1, 4 C – 2, 5
3) A – 4, 6 B – 1, 5 C – 2, 3
4) A – 2, 3 B – 1, 5 C – 4, 6
5) A – 2, 4 B – 1, 6 C – 3, 5 (……..)

agaram.lk

17) பாடசாலை ஒன்றின் அதிபர் தனது ஆசிரியர்களுக்கான கூட்டத்தில் கல்லூரியின் தரம் தொடர்பில் பின்வரும் கருத்துக்களை கூறியிருந்தார். "எமது பாடசாலையிலிருந்து வெளியேறும் சகலமாணவர்களும், சகல பாடங்களிலும் 100% சித்தி பெற்றிருத்தல் வேண்டும். இதற்காக முற்கூட்டிய ஆசிரியர்கள் தத்தமது மாணவர்களின் பலம், பலவீனங்களை அறிந்து பலவீனங்களை இல்லாமல் செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அத்துடன் காலத்திற்கு காலம் துறை சார்ந்த ஆசிரியர்கள் ஒன்று கூடி தரங்களினை உயர்த்துவது தொடர்பில் கலந்துரையாடல்களை முன்னெடுக்க வேண்டும். மேலும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் மிகச்சிறப்பாக நடைபெறுவதனை பிரிவு மேற்பார்வையாளர்கள் சோதனை செய்தல் வேண்டும். இவை மட்டுமன்றி கடந்தகால சாதனை அடைவுமட்டங்களை தற்போதைய அடைவுமட்டங்களுடன் ஒப்பிட்டு அட்டவணைகள், வரைபடங்களாக பிரிவு விளம்பரப் பலகைகளில் காட்சிப்படுத்தல் வேண்டும். இவற்றை நீங்கள் நடைமுறைப்படுத்துவதனை பிரதி அதிபர் கண்காணித்துவருவார்" எனக் குறிப்பிட்டார்.

மேற்படி கூட்டத்தில் பாடசாலையின் தரத்தினை மேம்படுத்துவதற்கு அதிபர் குறிப்பிட்ட தரக்கட்டுப்பாட்டு முறைகள் எத்தனை?

1) 5 ஆகும் 2) 4 ஆகும் 3) 3 ஆகும் 4) 2 ஆகும் 5) 1 ஆகும் (……..)

18) பானங்களை போத்தலில் அடைத்து விற்பனை செய்யும் நிறுவனமொன்றின் செலவின வகைகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A – ஊழியர்களுக்கான மாதாந்த சம்பளம்

B – தொழிற்சாலைக் காப்புறுதிக்கட்டணம்

C – மூலப்பொருட் கொள்வனவுகள்

D – விற்பனைத் தரகுகள்

E – வெற்றுப்போத்தல்களைக் கொள்வனவு செய்தல்

F – வரிக்கட்டணங்கள்

G – துண்டுவீத அடிப்படையிலான ஊழியர் கூலிகள்

H – உற்பத்தி அலகுகள் மீதான தனியுரிமைக்கட்டணங்கள் (Royality)

இவற்றுள் உற்பத்தி அலகுகளுக்கேற்ப மாற்றமடைந்து செல்லும் கிரயங்களினைக் கொண்ட தொகுதியாக அமைவது.

1) A, B, C, D, E 2) A, B, F, G, H 3) B, E, F, G, H

4) C, D, E, G, H 5) B, D, E, F, H (……….)

19) பொருளொன்றின் வாழ்க்கைச்சுற்றோட்டம் என்பது பல்வேறு கருதுகோள்களின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்டதாகும். கீழ்வரும் கருதுகோள்களில் தவறான கருதுகோளாக கருதக்கூடியது.

1) உற்பத்திக்கு குறிப்பிட்ட ஆயுட்காலமொன்றிருத்தல்.

2) உற்பத்தியொன்று விற்பனையாளருக்கு வெவ்வேறுபட்ட அச்சுறுத்தல்களை ஏற்படுத்திக் கொடுக்கக்கூடிய பல்வேறு கட்டங்கள் சிலவற்றைப் பின்தள்ளச் செய்யும்.

3) பொருள் ஒன்றின் வாழ்க்கைச்சுற்றோட்டத்தின் ஐந்து கட்டங்களையும் ஒவ்வொரு பொருளும் கடந்தே ஆயுட்காலத்தை நிறைவு செய்வதுண்டு.

4) பொருள் ஒன்றின் வாழ்க்கைச்சுற்றோட்டத்தின் பல்வேறு கட்டங்களின் போதும் விற்பனையும், இலாப அளவும் மாற்றமடைந்து செல்வதுண்டு.

5) பொருள் ஒன்றின் வாழ்க்கைச்சுற்றோட்டத்தின் போது விற்பனையாளரினால் பல்வேறு உபாய வழிமுறைகள் பின்பற்றப்படுவதுண்டு. (……….)

agaram.lk

20) தைக்கப்பட்ட ஆடை விற்பனையினை அதிகரிப்பதற்காக டிசம்பர் மாதத்தில் “கையிருப்பை அகற்றும் மலிவு விற்பனை” நடாத்தப்பட உள்ளதாக தொலைக்காட்சி ஊடகமொன்றில் அறியச் செய்கின்றது. இது மேம்படுத்தல் கலவை மாறிகளில்.

1) விளம்பரமாகவும், விற்பனை மேம்படுத்தலாகவும் கருதமுடியும்.

2) விளம்பரமாக கருத முடியும்.

3) மக்கள் தொடர்பாக கருதமுடியும்.

4) தனிப்பட்ட விற்பனையாக கருதமுடியும்.

5) நிகழ்வு அல்லது அனுபவங்களாக கருதமுடியும். (……….)

21) வவுனியா நகரில் உள்ள அரிசி ஆலை ஒன்றின் உரிமையாளர், திரு. டினோஜன் கிளிநொச்சி, முல்லைத்தீவில் உள்ள வயல் நிலங்களிலிருந்து நெல்லினை தொகையாகக் கொள்வனவு செய்து, தமது ஆலைக்கு எடுத்துச்சென்று அரிசியாக்கி பொதிகட்டி “வாணி அரிசி” என பெயரிட்டு சந்தைப்படுத்துகின்றார். இங்கு சூட்டப்பட்ட வாணி அரிசி என்கின்ற சின்னம் ஒரு,

1) தனிப்பட்ட சின்னம் ஆகும் 2) குடும்பச்சின்னம் ஆகும்

3) தேசிய சின்னம் ஆகும் 4) பொருள் சின்னம் ஆகும்

5) மேற்குறித்த எதுவுமன்று (……….)

22) பட்டியற்படுத்தப்பட்ட பொதுக்கம்பனி ஒன்று தொடர்பான பின்வரும் கூற்றுக்களுள் தவறான கூற்றினைத் தெரிவு செய்க.

1) பங்காணைப்பத்திரம் ஒன்றினை கொள்வனவு செய்து வைத்துள்ள முதலீட்டளார், பங்கிலாபங்களைப் பெறமுடிவதில்லை.
2) உரித்து வழங்கலினால் கம்பனியின் கூறப்பட்ட மூலதனத்தில் மாற்றங்கள் இடம் பெறுவதுண்டு.
3) உரித்து வழங்கலினால் கம்பனியின் பங்குதாரர் எண்ணிக்கை அதிகரிக்கப்படமாட்டாது.
4) பங்குகளின் சந்தைவிலை அதிகரித்தல் கம்பனியின் கூறப்பட்ட மூலதனத்தை அதிகரிப்பதுண்டு.
5) ஒதுக்கங்களை மூலதனமாக்கல் செயன்முறைக்கு கொழும்பு பங்குச்சந்தையின் பூரணமான அனுமதியினைப் பெற்றிருத்தல் வேண்டும். (……….)

23) பின்வருவன மாற்று நிதியீட்டல் வழிமுறைகளின் சில அனுகூலங்கள் ஆகும்.

- கிரயம் குறைவாக இருத்தல்
- பெற்றுக் கொள்ளல் இலகு
- மீளச் செலுத்த வேண்டியதில்லை
- வணிகப்பொறுப்புக்கள் அதிகரிக்காமை
- நிபந்தனைகளுக்கு உட்படவேண்டிய அவசியமிருப்பதில்லை

மேற்குறித்த அனுகூலங்கள் யாவற்றையும் கொண்டுள்ள நிதியீட்டல் வழிமுறையாகக் கருதக்கூடியது எது?

1) சாதாரண பங்குவழங்கல் 2) வங்கிக்கடன் 3) குத்தகை
4) முன்னுரிமை பங்குவழங்கல் 5) மேலதிக சொத்து விற்பனை (……….)

24) பின்வரும் அட்டவணையில் X நிரலானது நிதிமுகாமையாளர்களின் பிரதான தீர்மானங்களையும், Y நிரலானது அப்பிரதான தீர்மானங்களுக்குப் பொருத்தமான சிறிய தீர்மானங்களையும் எடுத்துக் காட்டுகின்றது.

X	Y
A. நீண்டகால முதலீட்டுத் தீர்மானம்	1. செலுத்த வேண்டிய செலவுகள் தொடர்பான தீர்மானம்
B. குறுங்கால முதலீட்டுத் தீர்மானம்	2. காசு முகாமைத்துவம் தொடர்பான தீர்மானம்
C. நீண்டகால நிதியிடல் தீர்மானம்	3. பங்குலாப பகிர்வு தொடர்பான தீர்மானம்
D. குறுங்கால நிதியிடல் தீர்மானங்கள்	4. வணிகத்தை புணரமைத்தல் தொடர்பான தீர்மானம்

X, இற்கும் Y இற்கும் பொருத்தமான இணைப்பினைத் தெரிவு செய்க.

1) A – 3 B – 1 C – 4 D – 2
2) A – 2 B – 3 C – 4 D – 1
3) A – 4 B – 2 C – 3 D – 1
4) A – 4 B – 1 C – 3 D – 2
5) A – 3 B – 4 C – 2 D – 1 (……….)

agaram.lk

25) மனிதவள முகாமைத்துவத்தில் தொழில் பகுப்பாய்வின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் சில வகைகள் கீழே தரப்பட்டுள்ளன.

A – நுண்மதிமட்டம்
B – வேலைக்குரிய பணிகள்
C – மேற்பார்வை
D – மனப்பாங்கும் ஈடுபாடும்
E – அனுபவம்
F – பணியாற்றவேண்டிய காலம்
G – மொழி அறிவு
H – சேவை நிபந்தனை
I – பொது அறிவு
J – செயற்திறன் மதிப்பீடு

மேலே தரப்பட்டுள்ள தகவல்களில் வேலை விபரணத்துக்குரிய தகவல்களாகக் கருதக்கூடியவை எதுவாகும்.

1) C, E, G, H, J
2) D, F, G, H, I
3) E, F, H, I, J
4) B, C, F, H, J
5) A, D, E, G, I (……..)

26) பின்வருவன மனிதவள முகாமைத்துவம் தொடர்பான சில வரைவிலக்கணங்கள் ஆகும். இவற்றில் தவறான வரைவிலக்கணத்தினை தெரிவு செய்க.

1) அபிவிருத்தி :- முகாமைத்துவம் சாராத ஊழியரின் நிகழ்கால நிலையினை விட எதிர்காலச் செயற்பாட்டினை மேம்படுத்தும் செயன்முறை.
2) ஊழியர் அசைவு :- தொழில் பெறுநரின் வேலையில் ஏற்படுகின்ற மாற்றங்கள் ஊழியர் அசைவு என்பதாகும்.
3) தொழிற்பிணக்குகள் :- தொழில் பிரச்சினை காரணமாக தொழில் வழங்குநர், மற்றும் ஊழியர்களிடையே ஏற்படும் கைகலப்புக்கள்.
4) செயற்திறன் மதிப்பீடு :- தொழில் பெறுநர் தமது தொழிலை எந்தளவிற்கு சிறப்பாக நிறைவேற்றுகின்றார் என்பதை கண்டறிதல்.
5) பின்னணிப் பரிசோதனை :- தொழில் எதிர்பார்ப்பாளரின் தனிப்பட்ட பின்னணியை வெளிப்படுத்துவதற்காக நடாத்தப்படும் விஷேட பரீட்சை.

(……..)

agaram.lk

27) பின்வரும் பொறுப்புக்களில் நிறுவனமொன்றின் ஊழியர்சார்பான பொறுப்பாக கருதக்கூடியது எது?

1) நிறுவனத்தினுள் உரியவாறு ஒழுக்கத்தைப் பேணிச்செல்லல்.
2) தொழில் ஒப்பந்தத்திற்கேற்ப கருமங்களை நிறைவேற்றல்.
3) தொழில் ஒப்பந்தத்தில் இணங்கப்பட்ட சம்பளத்தை வழங்குதல்.
4) ஊழியரது கோவைகளை உரியவாறு பேணிச்செல்லல்.
5) பிணக்குகளை நியாயமாக தீர்த்துவைத்தல். (……..)

28) தகவல் முறைமையின் கருமங்களையும், கருவிகளையும் கட்டுப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டுள்ள நியமங்கள், சட்டதிட்டங்கள், கொள்கைகள் என்பன இலத்திரனியல் தகவவல் முறைமையின் எக்கூறாக கருதப்படுவதுண்டு.

1) வன்பொருள்
2) மென்பொருள்
3) உயிரியல் பொருள்
4) தரவு
5) செயற்பாட்டு முறைமை (……..)

29) நிறைவேற்று உதவி முறைமையினை வலுவூட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் தகவல் முறையாக கருதக்கூடியது.

1) கொடுக்கல் வாங்கல் செயன்முறைப்படுத்தல் முறைமை.
2) அறிவுப்பணி முறைமை
3) வணிக நுண்மதி தகவல் முறைமை
4) அலுவலக தன்னியக்க முறைமை
5) முகாமைத்தகவல் முறைமை (……….)

30) தொழிற்பட்டுக் கொண்டிருக்கும் வணிகமொன்றுடன் இணைந்து முதலிட விரும்பும் எதிர்கால முதலீட்டாளர் ஒருவர் குறித்து நிறுவனத்தின் சமப்பாட்டுப்புள்ளியினை அறிய விரும்புகின்றார். இத்தகவலை உறுதி செய்வதற்காக வணிகத்திட்டத்தில் எப்பகுதி அவருக்கு உதவியாக இருக்கும்.

1) வணிக விபரணம் 2) சந்தைப்படுத்தல் திட்டம் 3) செயற்பாட்டுத்திட்டம்
4) நிதித்திட்டம் 5) பின்னிணைப்புக்கள் (……….)

❖ **31 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களிலுள்ள இடைவெளிகளுக்குப் பொருத்தமான பொருத்தமான சொற்களை இட்டுப்பூரணப்படுத்துக.**

31) அ) நுகர்வாளரின் அறிவு, அவர்களது வருமானம் போன்ற விடயங்கள் சில வணிகங்களுக்கு ……………………………………. உருவாக்குவதுடன் சில வணிகங்களுக்கு ……………… ……………………….. ஏற்படுத்துவதுண்டு.

ஆ) நாட்டின் பணவழங்கலானது ………………………..………………… கொள்கையினூடாக கட்டுப்படுத்தப்படுவதுடன், பணவழங்கலுக்கும் பொதுவிலை மட்டத்திற்கும் இடையில் ………………………………………… தொடர்பு காணப்படுவதுண்டு.

32) அ) வணிக வங்கிகள் தமது மேலதிக நிதியினை மத்தியவங்கியிலுள்ள அரச பிணைப்பத்திரங்களில் முதலீடு செய்யும் போது செலுத்தப்படும் வட்டி ……………………... ……………………………………………. எனவும், வணிக வங்கிகள் தம்மிடமுள்ள அரசின் பிணைகளை ஈடாக வைத்து மத்திய வங்கியிடமிருந்து நிதியினைப் பெற்றுக்கொள்ளும் போது அறவிடப்படும் வட்டி ………………………………………………………………… எனவும் அழைக்கப்படுவதுண்டு.

ஆ) இலங்கையின் நுகர்வோர் பாதுகாப்பு தொடர்பில் சிறப்பான பணியினை ………………….. ……………………………………………………………. செயற்படுத்தி வரும் அதேவேளை சுற்றுச்சூழல் மாசடைவதனை இழிவுபடுத்தும் நோக்கில் ……………………………………... …………………………………………….. தொழிற்பட்டுவருவதனை காணமுடிகின்றது.

33) வணிக நிறுவன வகைகள் தொடர்பிலான பின்வரும் கூற்றுக்கள் உண்மையா / பொய்யா என்பதை அவற்றுக்கு எதிரே உள்ள இடைவெளியில் குறிப்பிடுக.

அ) ஒப்பந்தம் இல்லாத பங்குடமையொன்றில் பங்காளருக்கிடையே ஏற்பட்டுள்ள மோசடி தொடர்பான பிணக்கினைத் தீர்ப்பதற்கு 1840 ஆம் ஆண்டின் மோசடி தவிர்ப்புக் கட்டளைச்சட்டம் பயன்படுத்தப்படுவதுண்டு. (…………………)

agaram.lk

ஆ) கடனை மீளச்செலுத்தும் ஆற்றல் தொடர்பான பரிசோதனையின்றி சகல பங்குதாரரினதும் இணக்கத்துடன் வரையறுத்த தனியார் கம்பனியொன்று பங்குலாபங்களை பகிர்ந்தளிக்க முடியும். (…………….…..)

இ) இலாபத்தினை அடிப்படை நோக்காக கொண்டிராததுடன் பங்குபெறுமதியினை மாற்றமின்றி கொண்டிருத்தல், பட்டியற்படுத்தப்பட்ட கம்பனியொன்றின் விஷேட பண்பாகும். (…………….…..)

ஈ) பாதணி உற்பத்தி வணிகமொன்றுடன் பாதாம் பருப்பு உற்பத்தி செய்யும் வணிகம் ஒன்றிணைதல் கிடை இணைப்பு என்பதாகும். (…………….…..)

34) வணிக வங்கிகள் வழங்கும் பிரதான சேவைகள் தொடர்பான பின்வரும் அட்டவணையிலுள்ள A, B, C, D இடைவெளிகளுக்குப் பொருத்தமான சொற்களையிட்டுப் பூரணப்படுத்துக.

வணிக வங்கிகளின் பிரதான சேவைகள்

- A. …………….…………
  - C …………….………
  - சேமிப்பு வைப்பு
  - நிலையான வைப்பு
- B.…………….…………
  - மேலதிக பற்று வசதிகள்
  - D ……………………….

35) அ) ஒரு முகாமையாளருக்கு நேரடியாக அறிக்கைப்படுத்தும் ஊழியர்களின் எண்ணிக்கை ……………………………………… எனப்படுவதுடன், இது ……………………..…, ………………..……………………………... என இருவகைப்படுத்தப்படுவதுண்டு.

ஆ) பதவிவழி அதிகார வரிசை பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள முறையினை ………………………….. ……………………………… வரைபடம் வெளிக்காட்டுவதுண்டு.

agaram.lk

36) அ) இருப்பு மட்டங்களை கணிப்பிடும் பொழுது குறிப்பிட்ட காலப்பகுதிக்குரிய பொருள் நுகர்வு மட்டுமன்றி ……………………………………, ……………………………………………... என்பன மீதும் கவனம் செலுத்துதல் வேண்டும்.

ஆ) பொருட்களுக்கும் சேவைகளுக்கும் விலை குறிக்கும் போது அவற்றின் கிரயம் மட்டுமன்றி ………………………………………, ……………………………………. என்பன மீதும் கவனம் செலுத்துதல் வேண்டும்.

37) அ) நிதி விகிதப்பகுப்பாய்விற்கு பயன்படுத்தப்படும் நிதிக்கூற்றுக்களாக வருமானக்கூற்று, …………………………………………….. மற்றும் ……………………………………………. என்பன பயன்படுத்தப்படுவதுண்டு.

ஆ) வணிகமொன்றின் குறுங்கால முறிவடையும் தன்மையினை இனங்காணும் விகிதங்களாக ……………………………….…………., ……………………………………………. என்பன பயன்படுத்தப்படுகின்றன.

38) அ) பதவியில் இணைக்கப்பட்ட புதிய ஊழியரொருவரை பதவியில் நிரந்தரமாக்க முன்னர் சேவை செய்ய வேண்டிய காலப்பகுதி …………………………………….. எனப்படுவதுடன் இக்காலத்தில் அவ் ஊழியர் ………………..………………….. என அழைக்கப்படுவதுண்டு.

ஆ) தெரிவு செய்தலின் பின்னர் பொருத்தமான நபர்களை தொழிற்பதவிகளில் நியமனம் செய்யும் செயன்முறை இணைத்துக் கொள்ளல் எனப்படும், இது இடம்பெறுவதான அடிப்படைகள் ………………………………………..., ……………………………………….. என்றவாறு இருவகைப்படுத்துவதுண்டு.

39) அ) தகவல் முறைமையினை வகைப்படுத்துவதற்கு பிரயோகிக்கப்படும் நியதிகளில் பயன்படுத்தப்படும் மட்டம், ……………………………………… மற்றும் ……………….. ……………………………………………. என வகைப்படுவதுண்டு.

ஆ) தகவல் தொழில்நுட்பத்துடன் இணைந்த இன்றைய ஏனைய தொழில்நுட்பங்களாக தகவல் முகாமைத்துவ தொழில்நுட்பம், ………………………………………………….. மற்றும் ……………………………………………………. என்பன சிறப்பாக செயற்பட்டுவருகின்றன.

40) அ) வணிக எண்ணங்கள் அனைத்திலிருந்தும் பொருத்தமான வணிக எண்ணத்தை இனங்காண்பதற்காக …………………………………… பகுப்பாய்வு மேற்கொள்ளும் அதே வேளை, முயற்சியாளருக்கு மிகவும் அனுகூலத்தைப் பெற்றுக்கொடுக்கின்ற வணிக எண்ணத்தை தெரிவு செய்வதற்காக ………………………………..……… பகுப்பாய்வும் மேற்கொள்ளப்படுவதுண்டு.

ஆ) வணிக எண்ணத்தின் செல்பாதையைச் சுட்டிக்காட்டுகின்ற வழிமுறை ……………………… ……………………… எனக் கருதப்படுவதுடன், இதன் அடிப்படை விடயங்களை சுருக்கமாக்கிக் காட்டும் பகுதி …………………………………………………. எனப்படும்.

❖ **41 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடைகளை எழுதுக.**

41) சிறிய மற்றும் நடுத்தர அளவு வணிகங்களை ஊக்குவிப்பதற்கு அரசு எடுத்துவரும் நிதிசார்ந்த ஊக்குவிப்புக்களுக்கு நான்கு உதாரணங்கள் தருக.

1) …………………………………………………………………………………………...
2) …………………………………………………………………………………………...
3) …………………………………………………………………………………………...
4) …………………………………………………………………………………………...

agaram.lk

42) இலத்திரனியல் பணத்தினூடாக கொடுக்கல் வாங்கலைத் தீர்க்கும் போது தொடர்புபடும் பிரிவினரைத் தருக.

1) ……………………………………………………………………………………………...

2) ……………………………………………………………………………………………...

3) ……………………………………………………………………………………………...

4) ……………………………………………………………………………………………...

43) வெளிநாட்டு வியாபாரத்திற்கு எதிராக தீர்வைகள், செலவாணிக் கட்டுப்பாட்டுசட்டத்திட்டங்கள், சுங்கசட்டதிட்டங்கள் போன்ற தடைகளை குறைப்பதற்கான சர்வதேச அமைப்புக்கள் நான்கினைத் தருக.

1) ……………………………………………………………………………………………...

2) ……………………………………………………………………………………………...

3) ……………………………………………………………………………………………...

4) ……………………………………………………………………………………………...

44) நிறுவனமொன்று தனது செயற்பாடுகளில் காணக்கூடிய பொதுப்பண்புகளைப் பயன்படுத்தி தொழில்களை தொகுதிகளாக்கும் செயன்முறையாகிய திணைக்களப்படுத்தலுக்கு பயன்படும் நான்கு அடிப்படைகளைத் தருக.

1) ……………………………………………………………………………………………...

2) ……………………………………………………………………………………………...

3) ……………………………………………………………………………………………...

4) ……………………………………………………………………………………………...

agaram.lk

45) தற்காலத்தில் நுகர்வோருக்கு பெறுமானத்தினை சேர்க்கின்ற உற்பத்தி மட்டங்கள் நான்கினை குறிப்பிடுக.

1) ……………………………………………………………………………………………...

2) ……………………………………………………………………………………………...

3) ……………………………………………………………………………………………...

4) ……………………………………………………………………………………………...

46) பணச்சந்தை கருமங்கள் திறமையாக செயற்படுவதற்கு தொழிற்பட்டு வரும் துணைச்சந்தைகள் நான்கினைத் தருக.

1) ……………………………………………………………………………………………...

2) ……………………………………………………………………………………………...

3) ……………………………………………………………………………………………...

4) ……………………………………………………………………………………………...

47) வணிக நிறுவனங்கள் மனிதவளங்களை ஆட்சேர்த்தல் பற்றிய இரு கூற்றுக்களை பின்வருமாறு வெளிப்படுத்தியுள்ளன.

A – வணிகம் - ஊழிய மொத்த நிரம்பலில் தாக்கத்தினை ஏற்படுத்தாத வகையிலும், ஏற்கனவே உள்ள ஊழியரை தூண்டும் வகையிலும் ஆட்சேர்த்தல்.

B – வணிகம் - பயிற்சியளித்தல் செலவுகளை குறைத்து, நவீன அறிவுள்ள நபர்களை ஆட்சேர்த்தல்.

மேலே தரப்பட்ட வணிகங்கள் பின்பற்றக்கூடிய ஆட்சேர்த்தல் வழிமுறைகளை குறிப்பிட்டு, அவை ஒவ்வொன்றும் அதற்கென பின்பற்றும் முறைகளுக்கு உதாரணம் ஒன்றினையும் தருக.

வணிக நிறுவனம்	**ஆட்சேர்த்தல் முறை**	**உதாரணம்**
A	…………………………	………………………..
B	…………………………	………………………..

48) மனிதவள முகாமையின் வெற்றியினை மதிப்பிடுவதற்கு பயன்படுத்தப்படும் நியதிகள் நான்கினைப் பெயரிடுக.

1) ……………………………………………………………………………………………..

2) ……………………………………………………………………………………………..

3) ……………………………………………………………………………………………..

4) ……………………………………………………………………………………………..

agaram.lk

49) பயன்படுத்தப்படும் மட்டத்திற்கமைய தகவல் முறைமையின் நான்கு வகைகளையும் குறிப்பிடுக.

1) ……………………………………………………………………………………………..

2) ……………………………………………………………………………………………..

3) ……………………………………………………………………………………………..

4) ……………………………………………………………………………………………..

50) வணிகத்திட்டமொன்றில் உத்தேச சந்தைப்படுத்தல் உபாய வழிமுறைகளில் உள்ளடக்க வேண்டிய தகவல்களைக் குறிப்பிடுக.

1) ……………………………………………………………………………………………..

2) ……………………………………………………………………………………………..

3) ……………………………………………………………………………………………..

4) ……………………………………………………………………………………………..

வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
தவணைப் பரீட்சை, யூன் - 2019

Conducted by Field Work Centre, Thondaimanaru
In Collaboration with Provincial Department of Education
Northern Province
Term Examination, June - 2019

FWC

தரம் :- 13 (2019)	வணிகக்கல்வி - II	மூன்று மணித்தியாலம் பத்து நிமிடம்

அறிவுறுத்தல்கள் :-

- **ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஆகக் குறைந்தது இரண்டு வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

பகுதி I

01. சபிலன் என்பவர் யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் அமைந்துள்ள தனது வீட்டுடன் இணைந்த காணியில் "Fresh Vegetable" என்ற பெயரில் மரக்கறி வணிகம் ஒன்றினை நடாத்தி வருகின்றார். இவர் குடாநாட்டில் உள்ள விவசாயிகளிடமிருந்து புத்தம் புதிய உடனடி விளை பொருட்களை மொத்தமாக கொள்வனவு செய்து தனது வணிக நிலையத்தில் வைத்து நுகர்வாளருக்கும் சில்லறை வியாபாரிகள், மற்றும் உணவகங்களுக்கும் விற்பனை செய்து வருவதுடன், உடனடி மரக்கறி வகைகளினைக் கொண்ட "Vegetable Soup" பானம் ஒன்றினையும் தயார் செய்து சந்தைக்கு வழங்குகின்றார். நஞ்சற்ற மரக்கறிகள் என்பதும் சுவையான சூப் வகைகளும் இவரது விற்பனை இலாப அளவுகளை அதிகரித்துச் செல்கின்றது. இவ்வணிகத்தில் தற்போது ஆறு ஊழியர்கள் பணியாற்றி வருகின்றனர். எனினும் இவரது வணிகத்திற்கு அண்மையில் பிறிதொரு போட்டியாளர் ஒருவரும் இதனை ஒத்த வணிகத்தினை ஆரம்பித்திருப்பதும், தொடர்ச்சியாக இடம் பெறும் மின்வெட்டினால் காய்கறிகள் பழுதடைதலும் தற்போது சபிலன் எதிர்நோக்கும் பிரச்சினைகள் ஆகும்.

1) அ) மேற்படி வணிகத்தினை பொருள் உற்பத்தி வணிகமாகவா அல்லது சேவை உற்பத்தி வணிகமாகவா கருதுகின்றீர். காரணம் தருக.

ஆ) Fresh Vegetable வணிகத்தினை வணிகமெனக் கருதுவதற்கு அதில் காணப்படத்தக்க நான்கு பண்புகளைச்சுட்டிக் காட்டுக.

2) Fresh Vegetable வணிகத்தினை நீர்கற்ற எவையேனும் நான்கு வணிக வகைப்படுத்தலின் கீழ் வகைப்படுத்திக் காட்டுக.

3) Fresh Vegetable வணிகத்தில் அக்கறை செலுத்தும் நான்கு தரப்பினரைக் குறிப்பிடுவதுடன் அத்தரப்பினர் ஒவ்வொருவரும் அவ்வாறு அக்கறை காட்டுவதற்கான காரணங்கள் தலா ஒன்று வீதம் குறிப்பிடுக.

4) Fresh Vegetable வணிகத்தில் தாக்கத்தினை செலுத்தும் நான்கு பேரினச்சூழல் காரணிகளைக் குறிப்பிடுவதுடன், அவை ஒவ்வொன்றும் எவ்வாறு வாய்ப்பாகவும், அச்சுறுத்தலாகவும் அமையும் என்பதற்கு தலா ஒவ்வொரு காரணிகளினைக் குறிப்பிடுக.

5) Fresh Vegetable வணிகமானது அதிகரித்த இலாபம் மற்றும் பிரதிமை காரணமாக உரிமையாளரான சபிலன் தனது வணிகம் அமைந்துள்ள பலாலி வீதியின் இருமருங்கிலும் நிழல்தரு மரங்களை நாட்டி அவற்றினை தொடர்ச்சியாக பராமரிக்கும் பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றார்.

agaram.lk

அ) மேற்படி உரிமையாளரின் செயற்பாட்டினை வணிகக்கல்வி கற்ற மாணவன் என்ற வகையில் நீர் எவ்வாறு கருதுவீர்? அதற்கான விரிவான வரைவிலக்கணம் ஒன்றினைத்தருக.

ஆ) உம்மால் குறிப்பிடப்பட்ட செயற்பாட்டினை முன்னெடுப்பதனால் வணிகங்களுக்கும் மற்றும் சமூகத்தவர்க்கும் கிடைக்கும் தலா இரு நன்மைகளைக் குறிப்பிடுக.

(5x4=20 புள்ளிகள்)

02. "அதிகரித்துவரும் சனத்தொகை மற்றும் இதனூடான குடியிருப்பு நெருக்கடிகள், இயற்கை வளங்கள் வகைதொகையின்றி அழிக்கப்படல், காலநிலை மாற்றங்கள் போன்ற பல சூழல் நெருக்கடிகளை இன்று முழு உலகமுமே அனுபவித்துவருகின்றது."

1) அ) நிலைபேறான சூழல் அபிவிருத்தியினை அடைவதற்கு வணிகங்கள் மேற்கொள்ள வேண்டிய கருமங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

ஆ) உற்பத்தியின் போதும், நுகர்வின் போதும் தோன்றும் கழிவுகளைக் குறைக்கக்கூடிய நிலைபேறான தன்மைக்கான முறைகள் நான்கினைக் குறிப்பிடுக.

2) "உணவுச்சாலை ஒன்றின் ஒழுக்க விழுமியக்கோவையும், எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றின் ஒழுக்க விழுமியக்கோவையும் வேறுபட்டு காணப்படுவதுண்டு"

அ) மேற்படி வணிகங்களுக்கிடையே ஒழுக்க விழுமியக்கோவைகள் வேறுபட்டு காணப்படுவதற்குரிய காரணங்கள் எவை எனக் கருதுகின்றீர்.

ஆ) சிறந்த ஒழுக்க விழுமியங்களை கட்டியெழுப்பியுள்ள வணிகமொன்றிற்கு கிடைக்கத்தக்க நான்கு அனுகூலங்களைக் குறிப்பிடுக.

3) வவுனியா நகரப்பாடசாலையொன்றிலிருந்து கற்றுவெளியேறிய வினுஷன், ஜெனிபன் ஆகிய இரு நண்பர்களும் இணைந்து கணனி மென்பொருட்களையும், இணைய வடிவமைப்புக்களையும் உருவாக்கும் வணிகமொன்று "ஜெனுவின் சொவ்வெயர் அன்ட் கம்பனி" எனும் பெயரில் பஸ்தரிப்பு நிலையத்திற்கருகில் ஆரம்பித்தனர்.

அ) மேற்படி வணிகம் எத்தகைய வணிக வகை எனவும், அது பதிவு செய்யப்பட வேண்டியசட்டத்தினையும் குறிப்பிடுக.

ஆ) மேற்படி வணிகத்தை எதிர்காலத்தில் விஸ்தரிப்பதற்கு பொருத்தமான வணிக வகையினை குறிப்பிடுவதுடன், நீர் அதனை தெரிவு செய்ததற்கான நான்கு காரணங்களையும் குறிப்பிடுக."

4) "உலகம் முழுவதும் பிரபல்யமடைந்துள்ள அங்கீகார வணிகங்கள், இலங்கைச் சந்தையிலும் பிரவேசிக்கும் போக்கு இன்று அதிகரித்து வருவதனைக் காண முடிகின்றது.

அ) அங்கீகாரம் பெறுபவருக்கு தோல்வியடையக்கூடிய போக்குகள் குறைவாகவே காணப்படுவதுண்டு. ஏன் இவ்வாறு குறைவாக காணப்படுகின்றது என்பதற்கு நான்கு காரணங்களைத் தருக.

ஆ) அங்கீகாரம் பெறுபவரின் பாதகமான செயற்பாடுகள் காரணமாக அங்கீகாரம் வழங்குபவரின் நன்மதிப்பு பாதிக்கப்படல் கூடும். எத்தகைய செயற்பாடுகள் வழங்குபவரின் நன்மதிப்பினை பாதிக்கும் என்பதற்கு நான்கு காரணங்கள் தருக.

agaram.lk

5) "வணிக வாய்ப்புக்களை உருவாக்கிக்கொள்ளல், அவற்றில் இருந்து பயன்களைப் பெற்றுக்கொள்ளல், ஒழுங்கமைப்புக்களை உருவாக்கிக்கொள்ளல் ஆகிய கருமங்களின் சேர்க்கை முயற்சியாண்மைச் செயன்முறை என அழைக்கப்படும்"

அ) முயற்சியாண்மைச் செயன்முறையின் படிமுறைகளை வரிசைக்கிரமமாக குறிப்பிடுக.

ஆ) சிறிய மற்றும் நடுத்தர வணிகங்கள் தோல்வியடைவதற்கான நிலைமைகள் பெரிதும் காணப்படுமெனினும், முயற்சியாண்மை சார்பண்புகளில் சில இவை தோல்வியடைவதனை தடுப்பதும் உண்டு. இத்தகைய தடுக்கும் பண்புகளை உதாரணங்களுடன் குறிப்பிடுக.

(5x4=20 புள்ளிகள்)

03.

1) இலங்கையில் உள்ள பிரபல சர்வதேசப் பாடசாலையொன்றின் பழைய மாணவர்கள் கல்லூரித்தினத்திற்காக வெளிநாடுகளிலிருந்து வந்தடைந்து, தமது அனைவரினதும் பங்களிப்பாக ரூபா பத்து இலட்சத்தினை கல்வி அபிவிருத்திக்கென அதிபரிடம் கையளிக்கின்றனர். இதில் ரூபா ஐந்து இலட்சத்தினை மக்கள் வங்கியில் கல்லூரி அபிவிருத்திக்கான நடைமுறைக்கணக்கில் வைப்பிலிட்ட அதிபர். மிகுதிப்பணத்தில் ரூபா இரண்டரை இலட்சத்தினை அதே வங்கியில் நிலையான வைப்பில் இடுகின்றார். மீதமுள்ள பணத்தினை இலங்கை வங்கியின் சேமிப்புக்கணக்கில் இட்டு அதற்கென வரவு அட்டை ஒன்றினையும் பெற்றுக்கொள்கின்றார்.

அ) மேற்படி சம்பவத்தில் காணப்படத்தக்க பணவகைகளினையும் அவற்றின் பெறுமதிகளையும் எடுத்துக்காட்டுக.

ஆ) வரவு அட்டையினை பெற்றுக்கொண்ட அதிபர் அதன் மூலம் கொடுக்கல் வாங்கல் செய்வதில் உள்ள இரு அனுகூலங்களையும், இரு பிரதிகூலங்களையும் குறிப்பிடுக.

agaram.lk

2) உமது உறவினர் ஒருவர் வெளிநாட்டில் பணிபுரிந்துவிட்டு பதினைந்து ஆண்டுகளின் பின்னர் தனது சொந்த இடத்திற்குத் திரும்பியிருக்கின்றார். இவர் தனது சொந்தக் காணியில் பழப்பாகு, மற்றும் பால் உற்பத்தி செய்வதற்கான தொழிற்சாலை ஒன்றினை ஸ்தாபிக்க எண்ணியுள்ளார். எனினும் தேவைப்படும் இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதா? அல்லது குத்தகைக்கு எடுப்பதா? சிறந்தது என தீர்மானிக்க வேண்டியவராக உள்ளார்.

அ) வணிகக்கல்வியை கற்ற மாணவன் என்ற வகையில் குத்தகையினால் கிடைக்கும் நன்மைகள் நான்கினை அவருக்கு முன்வைக்குக.

ஆ) மேற்படி முதலீட்டாளர் வணிக நடவடிக்கைகளுக்காக வங்கிக்கடன் ஒன்றை பெறுவது தொடர்பில் ஆலோசிக்கின்றார். அவரது நண்பர் ஒருவர் வங்கிக்கடனை காட்டிலும் வங்கி மேலதிகப்பற்று சிறந்ததெனக் குறிப்பிடுகின்றார். மேற்படி இரு தெரிவுகள் தொடர்பிலும் நீர் எதனை சிபார்சு செய்வீர். அதற்கான மூன்று காரணங்களை முன்வைக்குக.

3) "வணிக வங்கிகள் இன்று தன்னியக்க ரெலர் இயந்திரங்களை மூலதனச் செலவுகள் அதிகமெனினும் வாடிக்கையாளர் கூடும் இடங்களில் பெருமளவு பொருத்தி வருவதனைக் காண முடிகின்றது."

அ) மூலதனச் செலவு அதிகமெனினும் வங்கிகள் ரெலர் இயந்திரங்களைப் பொருத்துவதன் மூலம் கிடைக்கும் அனுகூலங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

ஆ) தன்னியக்க வங்கிச்சேவையின் மூலம் வங்கியின் வாடிக்கையாளருக்கு கிடைக்கும் அனுகூலுங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

4) “காப்புறுதி செய்பவரினால் தவணைக்கட்டணம் செலுத்துவதற்கும் காப்புறுதி அபாயங்கள் காரணமாக காப்புறுதி செய்பவருக்கு ஏற்படக்கூடிய நட்டத்திற்காக காப்புறுத்துவோன் இழப்பீடு கொடுப்பதற்கும் காப்புறுதி செய்பவருக்கும், காப்புறுத்துவோருக்கும் இடையே ஏற்படுத்திக் கொள்ளும் உடன்பாடே காப்புறுதி என அழைக்கப்படும்.”

அ) காப்புறுதி ஒப்பந்தம் என்பதனை வரையறுத்து இவ் ஒப்பந்தத்துடன் தொடர்புபடும் இரு பிரிவினரையும் குறிப்பிடுக.

ஆ) மேற்குறித்த காப்புறுதி ஒப்பந்தம் செல்லுபடியாவதற்கு இருக்க வேண்டிய நான்கு அம்சங்களைக் குறிப்பிடுக.

5) கல்லூரி ஒன்றின் அதிபர் திரு.P.ஜெயக்குமார் அவர்கள் ஒகஸ்ட் விடுமுறையின் போது அனைத்து ஆசிரியர் சேவை தரம் - 3 இல் உள்ளவர்கள் பயிற்சி வேலைத்திட்டமொன்றில் பங்குபெறச் செய்தல் வேண்டும் என கல்லூரியின் சகல பிரிவுத்தலைவர்களுக்கும் தத்தம் பிரிவில் உள்ள உரிய ஆசிரியர்களுக்கும் தெரிவிக்கும்படி சுற்றறிக்கை மூலம் அறிவிக்கப்பட்டதோடு, இது தொடர்பில் மேற்படி செய்தி உரிய ஆசிரியர்களுக்கு அறிவிக்கப்பட்டதென்றும் பங்குபற்றுவதற்கான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பிரிவுத்தலைவர்களினால் அதிபர் அவர்களுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டது.

அ) மேற்படி தொடர்பாடல் நிகழ்வினை கருத்தில் கொண்டு தொடர்பாடல் செயன்முறையின் அடிப்படைகளை உரிய நிகழ்வுடன் தொடர்புபடுத்தி தனித்தனியே குறிப்பிடுக.

ஆ) மேற்படி பயிற்சி வேலைத்திட்ட நிறைவில் பெறப்பட்ட பின்னூட்டலில் ஆசிரியர் ஒருவர் குறித்த பயிற்சி வேலைத்திட்டம் தொடர்பில் அதிருப்தியினை வெளிப்படுத்தியிருந்தார். இத்தகைய அதிருப்திக்கான காரணங்கள் யாதாக இருக்குமெனக் கருதுகின்றீர்.

(5x4=20 புள்ளிகள்)

04.

1) “பொருளாதார சமூக அபிவிருத்தியிலும் பூகோளமயமாதலிலும் முக்கிய கருவியொன்றாகப் போக்குவரத்து காணப்படுகின்றது. பொருட்களின் உற்பத்தி, நுகர்வு என்பன போக்குவரத்தின் காரணமாகவே வேறுபட்ட இடங்களில் நடைபெறுவதற்கு காரணமாக அமைந்து விடுகின்றது.”

அ) தற்போது நிலவும் அதிகவெப்பமான காலநிலையினால் தென்னிலங்கையிலிருந்து பழங்களை வடக்கு, கிழக்குப்பகுதிகளுக்கு நகர்த்துவதில் பொருத்தமான போக்குவரத்து ஊடகமொன்றை தெரிவுசெய்வதில் செல்வாக்குச் செலுத்தும் நான்கு காரணிகளைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக.

ஆ) போக்குவரத்தினால் கிடைக்கப்பெறும் பொருளாதார சமூக அனுகூலங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

2) “சரியான உற்பத்தி, சரியான அளவு, சரியான நேரம், சரியான இடம், சரியான விலைகளில், நல்ல நிலைமையில், சரியான நுகர்வோருக்கு விநியோகிப்பதற்கு அமையவியல் (Logistics) முக்கியமான ஒன்றாகும்.”

அ) உள்நோக்கிய அமையவியல் (Inbound Logistics), வெளிநோக்கிய அமையவியல் (Out bound Logistics) என்பனவற்றைத் தனித்தனியே விளக்குக.

ஆ) அமையவியல் கருமங்களை சிறப்பாக முன்னெடுப்பதனால் வணிகமொன்றுக்கு கிடைக்கத்தக்க நான்கு அனுகூலங்களைக் குறிப்பிடுக.

agaram.lk

3) கிளிநொச்சியில் உள்ள பிரபலமான ஆடை உற்பத்தித்தொழிற்சாலையில் இருந்து உற்பத்தி செய்யப்பட்ட ஆடைகளை மொத்தமாகக் கொள்வனவு செய்யும் திரு.கலாகரன் என்ற முதல்வர் இலங்கையின் பல்வேறுபட்ட சந்தைகளுக்கு விற்பனை செய்வதற்கு வேறுபட்ட முகவர்களை அமர்த்தி உள்ளார். இவர்களில் சுஜந் தனது விருப்பப்படியே முதல்வரது சார்பில் பொருட்களைக் கொள்வனவு செய்து விற்பனை செய்துவருவதுடன், அதனடிப்படையில் தரகுப்பணத்தினையும் பெற்றுக்கொள்வார். ஜேகிளின் கொள்வனவாளரையும், விற்பனையாளரையும் தொடர்புபடுத்தி பரிமாற்றம் இடம்பெற உதவுவதுடன் இரு பிரிவினரிடமிருந்தும் தரகு கட்டணத்தைப் பெற்றுக்கொள்வார். மிகுஜன் முதல்வர்சார்பாக கடனுக்கு விற்பனை செய்து கடன் பணத்தை அறவிடும் பொறுப்புடன் செயற்படுவார். இவருக்கு மேலதிகமாக தரகுப்பணம் வழங்கப்படுவதுண்டு. லஜன் முதல்வர் சார்பாக பொருட்களை விற்பனை செய்யும் போது தனது தனிப்பட்ட பெயரில் மேற்கொள்ளும் முகவராவார்.

அ) மேற்குறிப்பிட்ட முகவர்களான சுஜந், ஜேகிளின், மிகுஜன், லஜன் ஆகிய ஒவ்வொருவரும் வழங்கும் சேவைகளைப்பொறுத்து பொருத்தமான முகவரின் வகையினுள் உட்படுத்துக.

ஆ) வியாபாரத்தில் இடை நடுவர்களைப் பயன்படுத்துவதன் மூலம் பெறப்படும் நான்கு அனுகூலங்களைக் குறிப்பிடுக.

4) சிறு கைப்பணிப் பொருட்களை உற்பத்தி செய்துவந்த திரு.மிகுதாகரன் இலங்கைச்சந்தையில் பெருமளவு பங்கினைக் கைப்பற்றியதை தொடர்ந்து, இப்பொருட்களை வெளிநாட்டுச் சந்தைகளுக்கு அனுப்புவதற்கு உத்தேசித்துள்ளார்.

அ) மிகுதாகரன் வெளிநாட்டுச்சந்தைக்குள் நுழைவதனால் இலங்கைத் தேசத்திற்குக் கிடைக்கும் நான்கு அனுகூலங்களைக் குறிப்பிடுக.

ஆ) ஏற்றுமதி நடைமுறைத் தொடர்பில் மிகுதாகரனுக்கு விளக்கமளிப்பதற்காக அதன் படிமுறைகளை வரிசைக்கிரமமாகக் குறிப்பிடுக.

5) "சர்வதேச வியாபாரத்தில் பல்வேறுபட்ட ஆவணங்கள் பயன்படுத்தப்படுவதுண்டு."

அ) பின்வரும் ஆவணங்களுக்கிடையிலான இடைத்தொடர்பினை விளக்குக.
1. சுமைச்சீட்டும், நட்டஈட்டுக்கடிதமும்
2. விலை விசாரணைக் கடிதமும், விலைக்கூற்றும்

ஆ) இன்று ஏற்றுமதி, இறக்குமதி நடைமுறைகள் பெருமளவுக்கு இலத்திரனியல் முறைமையில் நடைபெறுவதனை காணமுடிகின்றது. இலத்திரனியல் வணிகத்தினால் வாடிக்கையாளருக்குக் கிடைக்கும் நான்கு அனுகூலங்களைத் தருக.

(5x4=20 புள்ளிகள்)

agaram.lk

பகுதி II

05.

1) உமது பாடசாலையில் க.பொ.த உயர்தரமாணவர்களினைக் கொண்ட கல்விச்சுற்றுலா ஒன்றினை பாடசாலை நிர்வாகமும், மாணவ முதல்வர்களும் இணைந்து ஒழுங்குபடுத்துகின்றனர். நீர் உமது பாடசாலையின் மாணவ முதல்வன் எனக்கருதிக்கொண்டு கீழ்வரும் வினாக்களுக்கு விடைதருக.

   அ) கல்விச்சுற்றுலாவினை வெற்றிகரமாக செயற்படுத்தி முடிப்பதற்கு உம்மால் கையாளப்பட்ட முகாமைத்துவக்கருமங்கள் நான்கினைக் குறிப்பிட்டு அவை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு உதாரணமும் தருக.

   ஆ) முகாமைத்துவத்தினைக் கற்றுக்கொண்ட வகையில், உமது கல்விச்சுற்றுலா வெற்றி பெறுவதற்கு முகாமைத்துவத்தின் முக்கியத்துவத்தினை கல்விச்சுற்றுலாவுடன் தொடர்புபடுத்தி நான்கு விடயங்களைக் குறிப்பிடுக.

2) உமது பாடசாலையின் அதிபர் அவர்கள் முகாமையாளர் என்ற வகையில் பின்வரும் பணிகளினை தொடர்ச்சியாக ஆற்றி வருகின்றார். இப்பணிகளை ஹென்றிமின்ற்ஸ்பேர்க் என்பவரது முகாமைத்துவ வகிபாகங்களின் கீழ் வகைப்படுத்திக்காட்டுவதுடன், அதன் உபவகிபாகங்களையும் அருகே குறிப்பிடுக.

   1. பழைய மாணவர் அன்பளிப்புச்செய்த கணனிகளைக் கல்லூரிப் பயன்பாடுகளுக்காக பங்கிட்டு வழங்கல்.
   2. நீண்டகால இடைவெளியின் பின்னர் இடம்பெற்ற துடுப்பாட்டம் தொடர்பில் ஊடகங்களுக்கு செவ்வி வழங்குதல்.
   3. ஆசிரியர், மாணவர்களின் ஒழுக்க விழுமியங்கள் தொடர்பில் மதிப்பிடலும், சுட்டிக்காட்டலும்.
   4. வருடாந்தப் பரிசுத்தின அறிக்கையினை தயார் செய்வதற்காக மன்றப் பொறுப்பாசிரியர்களிடம் ஆண்டுச் செயற்பாட்டறிக்கைகளைக் கோருதல்.

3) பின்வருவது விழிப்புல வலுவிழந்த மாணவர்களினைக் கொண்ட இல்லம் ஒன்றின் இலட்சிய நோக்கக்கூற்று ஆகும்.

   "இலங்கை வாழ் விழிப்புல வலுவிழந்தவர்களை நவீன விஞ்ஞான தொழில்நுட்ப உபகரணங்களைக் கொண்டு கல்வியின் ஊடாக அறிவாற்றலும், செயற்திறனும் வாழ்வின் சவால்கள் அனைத்தையும் எதிர்கொள்ளக்கூடிய சமநிலை ஆளுமையும் திறன்களும் மிக்கவர்களாக்குதல்."

   அ) இலட்சிய நோக்கக்கூற்றொன்றை தயாரிக்கும் பொழுது அதில் உள்ளடக்க வேண்டிய காரணிகள் நான்கினைக் குறிப்பிட்டு, மேற்படி இல்லத்தின் இலட்சிய நோக்கக்கூற்றிலிருந்து அவற்றை உதாரணம் காட்டுக.

   ஆ) மேற்படி இலட்சிய நோக்கக்கூற்றின் விருத்தியினை அடைவதற்கு, இவ்வாண்டு மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டுப் போட்டியொன்றை நடாத்த இல்ல முகாமை உத்தேசித்துள்ளது. இதற்கான திட்டமிடலைத் தொடர்ந்து இடம்பெறும் ஒழுங்கமைத்தல் கருமங்களை வரிசைக்கிரமமாகக் குறிப்பிடுக.

agaram.lk

4) “வணிகர் ஒருவர் இயற்கையான சத்துள்ள பழங்களினைக் கொண்டு பாடசாலை மாணவர்களுக்கான மென்பானம் ஒன்றினை உற்பத்தி செய்து சந்தைக்கு வழங்க எண்ணியுள்ளார். அதற்குப்பொருத்தமான உற்பத்தி முறை மற்றும் தொழிற்சாலை தள அமைப்பு முறை தொடர்பில் தீர்மானம் எடுக்க வேண்டியவராக உள்ளார்.

அ) வணிகருக்குப் பொருத்தமான உற்பத்தி முறையினைத் தெரிவு செய்யும் போது கவனம் செலுத்த வேண்டிய காரணிகள் நான்கினைத் தெளிவுபடுத்துக.

ஆ) தொழிற்சாலை தள அமைப்புத்திட்டம் ஒன்றினை தெரிவு செய்கையில் முக்கியமாக கருத்தில் கொள்ள வேண்டிய காரணிகள் நான்கினைக் குறிப்பிடுக.

5) “வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றின் முகாமைத்துவப் பணியாளரான திரு.லிந்துஜன் அவர்கள் கம்பனியின் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றும் போது, எமது நிறுவனத்திற்கு இவ்வாண்டும் தொடர்ச்சியாக சிறந்த உற்பத்தித்திறனுக்கான விருது கிடைக்கப்பெற்றுள்ளது எனவும் வளங்களை சிக்கனமாக பயன்படுத்தி கூடிய வெளியீடொன்றைப் பெற்றுக்கொண்டதே இவ்விருது கிடைப்பதற்கான காரணம் எனவும் நான் நம்புகின்றேன், எனக்குறிப்பிட்டிருந்தார்.”

அ) உற்பத்தித்திறன் என்றால் என்ன என்பதனை விளக்கி, நிறுவனமொன்றுக்கு உற்பத்தித்திறன் முக்கியத்துவம் பெறுவதற்கான மூன்று காரணங்களைத் தருக.

ஆ) மேற்படி கம்பனி தனது பொருள் உற்பத்தித்திறனை மேம்படுத்திய முறைகள் நான்கினைத் தருக.

(5x4=20 புள்ளிகள்)

06.

1) “சந்தைப்படுத்தல் செயல்முறையை அடிப்படையாகக் கொண்டுள்ள அடிப்படைக்காரணிகளே சந்தைப்படுத்தல் சார்பு எண்ணக்கருக்கள் என்பதாகும்.”

agaram.lk

அ) “சந்தைப்படுத்தல் சார்பு எண்ணக்கருக்கள் சந்தைகளில் ஆரம்பித்து சந்தைகளில் முடிவடைவதுண்டு.” மேற்படி கூற்றினை சார்பு எண்ணக்கருக்களின் தொடக்க, முடிவு எண்ணக்கருக்களைக் குறிப்பிட்டு நியாயப்படுத்துக.

ஆ) வணிகர்களுக்கு சந்தைப்படுத்தலின் முக்கியத்துவங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

2) பாதணி உற்பத்திச்சந்தையில் புதிதாக நுழைந்துள்ள உமது நண்பரான டிலக்சன் என்பவர் பாதணிகளை உற்பத்தி செய்து வழங்குவது தொடர்பில் சில தீர்மானங்களை எடுக்க வேண்டியவராக உள்ளார். நீர் அவருக்கு தீர்மானம் எடுப்பதற்காக முரண்பாடான பாதணிகளுக்கான சந்தையில் கேள்வியை ஏற்படுத்துபவர் யார்? அவர்கள் எங்கே இருக்கின்றனர்? அவர்களின் வருமான விபரங்கள் எத்தகையது? போன்றவை தொடர்பில் கவனம் செலுத்த வேண்டுமென விளக்குகின்றீர்.

அ) உமது அறிவுரையின் ஊடாக உற்பத்தியாளரான டிலக்சன் பாதணிச்சந்தை தொடர்பில் ஆற்ற வேண்டிய கருமம் எது என கருதுகின்றீர்? நீர் குறிப்பிட்ட கருமத்தினை ஆற்றுவதற்கான எவையேனும் அடிப்படைகள் மூன்றினைக் குறிப்பிடுக.

ஆ) மேலே நீர் குறிப்பிட்ட கருமத்தினை முறையாக நடைமுறைப்படுத்துவதன் ஊடே உற்பத்தியாளருக்குக் கிடைக்கும் நான்கு நன்மைகளைத் தருக.

3) “சந்தைப்படுத்தல் கலவை மாறிகளில் விலை என்பது தனித்துவமான கலவை மாறி ஆகும்.

அ) விலை என்பதனை வரையறுத்து, ஏன் கலவை மாறிகளில் விலை தனித்துவமானதென நீர் கருதுகின்றீர்?

ஆ) உற்பத்தியாளர் ஒருவர் விலை குறித்தலின் ஊடாக, அடைய எதிர்பார்க்கும் குறிக்கோள்கள் நான்கினைக் குறிப்பிடுக.

4) “வணிக உரிமையாளர்களின் வணிகத்தோடு இணைந்த பெறுமானத்தை (செல்வத்தை) உச்சப்படுத்துதலே நிதிமுகாமைத்துவத்தின் அடிப்படை நோக்கமாகும்.”

அ) வணிக உரிமையாளர்களின் பெறுமான அதிகரிப்பினை நிதிமுகாமை எவ்வாறு ஆற்ற முடியும் என்பதனை கம்பனி வணிகத்தை மையப்படுத்தி விளக்குக.

ஆ) மேற்படி வணிக உரிமையாளர்களின் வணிகத்தோடு இணைந்த பெறுமானத்தை உச்சப்படுத்துதல் தவிர்ந்த வேறு நிதி முகாமையின் நோக்கங்கள் நான்கினைத்தருக.

5) க.பொ.த உயர்தரத்தின் பின்னர் அமில்ரன் என்பவர் தனது வீட்டின் முன்புறமாக வளர்ப்பு மீன்களை விற்பதற்கான வணிகம் ஒன்றை ஆரம்பிக்க எண்ணியுள்ளார். தற்போது நிதியீட்டம் தொடர்பில் உரிமையாளர் பிரச்சினைகளை எதிர் நோக்கியுள்ளார்.

அ) எக்கருமங்களுக்கு அவருக்கு நிதி தேவைப்படுகின்றது என்பதையும், அந்நிதியீட்ட வகைகளையும் உதாரணங்களுடன் விளக்குக.

ஆ) அமில்ரன் நிதித் தேவையினை நிறைவு செய்வதற்கான முறையொன்றைத் தெரிவு செய்யும் போது கருத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் நான்கினைத் தருக.

(5x4=20 புள்ளிகள்)

agaram.lk

07.

1) வரையறுக்கப்பட்ட லூக்சன் கம்பனியின் கணக்குகளில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட 31.03.2019 இல் முடிவடைந்த வருடத்திற்கான தரவுத்தொகுதியொன்று கீழே தரப்பட்டுள்ளது.

	ரூபா
விற்பனைகள்	10,000,000
விற்பனைக் கிரயம்	6,000,000
மொத்த இலாபம்	4,000,000
செலவுகள்	1,000,000
காலப்பகுதிக்குரிய தேறிய இலாபம்	3,000,000
31.03.2019 இல் கணக்கு மீதிகள்	
காணியும் கட்டிடமும்	25,000,000
மோட்டார் வாகனம்	5,000,000
சரக்கிருப்பு	2,000,000
கடன்பட்டோர்	1,500,000
வங்கி மீதி	500,000
கடன் கொடுத்தோர்	1,000,000

அ) மேலே தரப்பட்ட தரவுகளின் உதவியுடன் பின்வரும் விடயங்களைக் கணிக்குக.

A – மொத்த இலாபவீதம்

B – தேறிய இலாப வீதம்

C – நடைமுறை விகிதம்

D – இருப்பு புரள்வு விகிதம்

ஆ) லூக்சன் கம்பனியின் பின்வரும் விடயங்களை விபரிக்குக.

A – திரவத்தன்மை

B – இருப்புப்புரள்வு தடவைகள்

2) வரையறுக்கப்பட்ட பிறைற்றன் பொதுக்கம்பனியின் இலாபகரத்தன்மையானது கடந்த சில வருடங்களாக கீழ்மட்டத்தில் காணப்படுகின்றது. இக்கம்பனியில் தற்போது சாதாரண பங்கு மூலதனம் ரூபா 10 மில்லியன் காணப்படுவதோடு, 10% மான ரூபா 8 மில்லியன் முன்னுரிமைப்பங்கு மூலதனமும், 12% மான ரூபா 7 மில்லியன் தொகுதிக்கடன்களும் நிதி நிலைமைக்கூற்றில் வெளிக்காட்டப்பட்டுள்ளது. அத்துடன் இலாபத்தன்மையினை அதிகரித்துக் கொள்வதற்காக வணிகத்தை நவீமையப்படுத்தும் நோக்கில் மேலதிக நிதியாக ரூபா 2 மில்லியனை திரட்ட நிதி முகாமை திட்டமிடுகின்றது. இதன்படி குறித்த நிதியினை சாதாரண பங்கு மூலமாகவா அன்றி தொகுதிக்கடன் மூலமாகவா திரட்டுவது மிகப்பொருத்தமானதென நீர் கருதுகின்றீர். உமது விடைக்கான காரணங்கள் தருக.

3) நீர் ஏற்கனவே தொழிற்பட்டுக் கொண்டிருக்கும் தனியார் போக்குவரத்துச்சேவை வழங்கும் நிறுவனமொன்றின் முகாமைத்துவ பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளீர் எனக்கருதிக்கொள்க. அந்நிறுவனத்தில் இதுவரை முறையான மனிதவளத்திட்டமிடல் தொடர்பான நடவடிக்கை எதுவுமே எடுக்கப்படாதிருப்பதனை நீர் அவதானிக்கின்றீர். உடனடியாகவே மனித வளங்களைத்திட்டமிட்டு ஒழுங்குபடுத்தும் நடவடிக்கையில் தீவிரமாக செயற்பட முனைகின்றீர்.

அ) மனிதவளதிட்டமிடல் செயன்முறையின் படிமுறைகளை வரிசைக்கிரமமாக குறிப்பிடுக.

ஆ) நீர் எதிர்வரும் காலத்திற்கான மனிதவள தேவையினை எதிர்வுகூறும் போது கவனம் செலுத்த வேண்டிய நான்கு காரணிகளைக் குறிப்பிடுக.

4) "இணைத்துக்கொள்ளல் செயற்பாட்டின் ஊடே சட்டரீதியான தொழில் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதற்காக தொழில் வழங்குனரால் தயார் செய்யப்படுவதே நியமனக் கடிதம் என்பதாகும்."

அ) நியமனக்கடிதம் ஒன்றின் உள்ளடக்கங்களைக் குறிப்பிடுக.

ஆ) நியமனக்கடிதம் வழங்கப்படுவதன் நான்கு முக்கியத்துவங்களை குறிப்பிடுக.

5) "ஆய்வாளர்களின் கருத்துப்படி தொழில் நிறுவனங்களில் ஊழியர் புரள்வு என்பதும் மற்றும் ஊழியர் வரவீனம் என்பதும் மனிதவள முகாமைக்கு பாரிய நெருக்கடிகளைக் கொடுக்கும் பிரச்சினைகளாகக் கருதப்படுகின்றது.

அ) பொதுவாக நிறுவனங்களில் ஊழியர் புரள்வு அதிகரித்துச் செல்வதற்கான எவையேனும் நான்கு காரணங்களைக் குறிப்பிடுக.

ஆ) நிறுவனத்திற்கு மனிதவளங்களின் சேவை கிடைக்கப்பெறாத அல்லது இழக்கப்படுகின்ற சந்தர்ப்பங்களே ஊழியர் வரவீனம் எனக்கருதப்படும். இத்தகைய ஊழியர் வரவீனத்தினை கணிப்பிடுகையில் கருத்தில் கொள்ளப்படும் சந்தர்ப்பங்கள் அல்லது நிலைமைகள் யாவை?

(5x4=20 புள்ளிகள்)

agaram.lk

08.

1) "மலையகத்தில் தரம் 9 வரை மாணவர்களைக் கொண்ட பாடசாலை ஒன்றில் தற்போது மாணவர் எண்ணிக்கை அதிகரிப்பதனைத் தொடர்ந்து, இப்பாடசாலையினை க.பொ.த சாதாரண தரம் வரை உயர்த்த மாகாணக்கல்வித் திணைக்களம் நடவடிக்கையினை எடுத்து, அப்பாடசாலைக்கு புதிதாக அதிபர் சேவை தரம் 2 னைச் சேர்ந்த ஒருவரை நியமித்துள்ளது. பதவியினைப் பொறுப்பேற்ற அதிபர் அலுவலகத்தினை பார்வையிட்ட போது இதுவரை நாளும் கோவைகள் ஒழுங்காக பேணப்படாது தகவல்கள் வகைப்படுத்தப்படாது இருப்பதுடன், ஒரு தகவலை பெற அதிக நேரங்களையும் செலவிட வேண்டி இருந்ததனை கண்டறிந்தார்.

அ) தகவல் முறைமை என்றால் என்ன?

ஆ) புதிய அதிபர் தகவல்களை மீள வகைப்படுத்துவதற்கு பயன்படுத்தும் நியதிகளையும், அவற்றிற்கான தகவல்வகைகளினையும் தனித்தனியே குறிப்பிடுக.

2) சிறந்த தகவல் முறைமையினை உருவாக்கிக்கொள்வதன் ஊடே கிடைக்கக்கூடிய அனுகூலங்கள் யாவை?

3) அ) நவீன தகவல் தொழிநுட்பத்தினைப் பயன்படுத்துவதனால் நிறுவனங்களுக்கு கிடைக்கத்தக்க நான்கு அனுகூலங்களைக் குறிப்பிடுக.

ஆ) தனிநபர் ஒருவருக்கோ அன்றி நிறுவனங்களுக்கோ தமது அன்றாட கருமங்களை மேற்கொள்வதற்கு இணைய வலையமைப்பு எவ்வாறு உதவும் என்பதற்கு நான்கு விடயங்களை முன்வைக்குக.

agaram.lk

4) "நிரோஜன் என்பவர் சிற்றளவு முயற்சியாளர் ஆவர். இவர் தனது வணிகத்தை நவீனப்படுத்தும் நோக்கில் வங்கிக்கடன் ஒன்றுக்கு விண்ணப்பித்த வேளை, வங்கி முகாமை இவரது வணிகத்திட்டத்தினை சமர்ப்பிக்குமாறு கோரியிருந்தது. எனினும் நிரோஜன் வணிகத்திட்டம் தயாரிப்பது தொடர்பில் போதிய விளக்கம் அற்றவராகவும் நம்பிக்கையற்றவராகவும் காணப்படுகின்றார்."

அ) நிரோஜனுக்கு வணிகத்திட்டத்தின் முக்கியத்துவத்தினை தெளிவுபடுத்துவதற்கு நான்கு காரணங்களை முன்வைக்குக.

ஆ) நிரோஜன் வணிகத்திட்டத்தினை தயாரிக்கும் போது கருத்தில் கொள்ள வேண்டிய நான்கு காரணிகளினைக் குறிப்பிடுக.

5) "வணிகத்திட்டமொன்றின் உள்ளடக்கங்களில் நிறைவேற்றுகைச்சுருக்கம் மற்றும் வணிக விபரணம் என்பவை முக்கியமான கூறுகள் ஆகும்."

அ) நிறைவேற்றுகைச்சுருக்கம் என்பதனை சுருக்கமாக விளக்கி, அதன் முக்கியத்துவத்திற்கான மூன்று காரணங்களைக் குறிப்பிடுக.

ஆ) வணிக விபரணம் ஒன்றில் உள்ளடக்கப்படும் நான்கு தகவல்களைக் குறிப்பிடுக.

(5x4=20 புள்ளிகள்)